# சித்திரக்கலை

## பாடத்திட்டம்

## தரம் 10

(2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)

**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம**
**2007**

# சித்திரக்கலை

## அறிமுகம்

சமூக மாற்றத்தோடு கலைத்திட்ட மாற்றமும் ஏற்படுவது இன்றியமையாததொன்றாகும். சமூகத்தேவைகள் மாறுவதற்கமைய கலைத்திட்டத்திலும் மாற்றங்கள் கால்திற்குக் காலம் செய்யப்படுவதுண்டு. இதனை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைக் கலைத்திட்டமானது தற்காலத்தேவைகட்கமைய அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பது கல்வியியலாளர்களின் ஏகோபித்த கருத்தாகும்.

கனி'ட இடைநிலைப்பிரிவின் முதலாவது ஆண்டாகக் கணிக்கப்படும் பத்தாம் தர சித்திரக்கலைப் பாடத்திற்கான இப்புதிய கலைத்திட்டமானது 2007ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்படுகிறது. இரசித்தல், ஆக்கத்திறன், செயன்முறை, அறிமுறை கலாச்சாரப் பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் கற்றல் தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டு அவற்றிக்கமைய இக்கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தேர்ச்சி மட்டக் கல்வியில் மாணவர் செயற்பாடுகள் வலுவான இடத்தைப் பெறுவதோடு வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் அந்தந்தத் தேர்ச்சி மட்டங்கள் தொடர்பாக குறைந்தது அண்மிய தேர்ச்சி மட்டங்களையாவது பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் ஒரு வளவாளராக மாறுகிறார். கற்றலுக்குத் தேவையான உபகரணங்களும் மற்றும் வசதிகளும் கொண்ட கற்றல் சூழலொன்றைத் திட்டமிடுதல் மாணவர்கள் கற்கும் விதத்தை அருகிலிருந்து அவதானித்தல், மாணவர்களின் இயலும், இயலாமை என்பவற்றை இனங்காணுதல், தேவையான முன்னூட்டல், பின்னூட்டல் என்பவற்றை வழங்கல் மூலம் கற்றலை விருத்தி செய்வதோடு வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்கள் கற்பதற்கும் கற்பனையைத் தூண்டுவதற்கும் உரியவாறு கற்றல் உபகரணங்களைத் திட்டமிடுவதும் ஆசிரியரின் அடிப்படைக் கடமையாகும்.

மாணவன் சிறந்த பிரசையாகவும் சமூகத்திற்கும் எதிர்கால உலகிற்கும் பிரயோசனம் உடையவராகவும் ஆக்கச் சிந்தனையுடைய பிரசையாகவும் உருவாவதற்கும் இக்கலைத் திட்டமானது ஆசிரியருக்கு மிகப் பயனுள்ளதாகும்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# சித்திரக்கலையின் ஆரம்பத்தேர்ச்சிகள்

1. சூழலுடன் இணைந்த விடயங்களின் கீழ் கருத்து வெளிப்பாட்டு சித்திரங்களை வரைவார்.

2. சூழலில் காணப்படும் பொருட்களின் அமைப்புடன் சமநிலையுடைய சித்திர ஒழுங்கிணைப்புடன் (Compostion) வரைவார்.

3. பாவனைக்குத் தேவையான அலங்காரச் சித்திரங்களைத் திட்டமிட்டு நிருமாணிப்பார்.

4. உற்பத்திக்குத் தேவையான கிறபிக் சித்திரங்களை நிருமாணிப்பார்.

5. பல்வேறு ஊடகங்கள் மூலம் சிலைகளையும் சிற்பகங்களையும் நிருமாணிப்பார்.

6. சமய, கலாச்சார அடிப்படையில் தேசிய, சர்வதேச ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட கலைஞர்களின் கலை நிருமாணங்களையும் தற்கால ஆக்கங்களையும் வெகுசனத் தொடர்பு சாதனங்கள் மூலம் அறிந்துகொள்வார்.

7. தேசிய, சர்வதேச வரலாற்றுக் காலத்திற்குரிய ஓவியங்கள் சிற்பங்களின் கலைப் பெறுமதியை விமர்சனம் செய்து சிறந்தவற்றைத் தனது நிருமாணிப்புடன் பயன்படுத்துவார்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## தேர்ச்சி மட்டங்கள் - தரம் 10

1.1 மனித, மிருக, சூழல் சம்பந்தமான ஆழமான கருத்துக்களை வெளிப்படுத்தும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரங்களை வரைவார்.

1.2 தேசிய பாரம்பரிய சித்திரங்களில் காணப்படும் மனித உருவங்கள், மிருக உருவங்கள், மரம், செடி, பூக்கள் என்பவற்றைக் கற்பார்.

2.1 இயற்கை தன்மையுடைய, செயற்கை தன்மையுடைய விடயங்களை விரிவாக இயற்கைத் தன்மை வெளிப்படும் விதத்தில் வரைந்து வர்ணம் தீட்டுவார்.

3.1 பாவனைப் பொருட்களை திட்டமிட்டு நிருமாணித்து அலங்காரம் செய்வார்.

3.2 குழந்தைகள் பயன்படுத்தும் பொருட்கள் துணி வகைகள் என்பவற்றைத் திட்டமிட்டு அலங்காரங்களை நிருமாணிப்பார்.

4.1 கதைகளுக்குப் பொருத்தமான சித்திரங்களை நிருமாணிப்பார்.

5.1 பல்வேறு வடிவங்களைப் பயன்படுத்தி புடைப்புச் சித்திரங்களை நிருமாணிப்பார்.

6.1 தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கை மேலைத்தேய ஓவியர்களின் கலைப்படைப்புக்களை அறிந்து கொள்வார்.

6.2 பொதுசனத் தொடர்பு சாதனங்களில் காட்டப்படும் ஆக்கச் சிறப்புடைய கலை ஆக்கங்களை அறிந்து கொள்வார்.

7.1 கண்டி, கம்பளைக் காலத்திற்குரிய கட்டிடக்கலை, ஓவியக் கலை, சிற்பக் கலைகளை அறிந்து கொள்வார்.

7.2 எகிப்திய, கிரேக்க கலைகளை அறிந்து கொள்வார்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## கற்றல் - கற்பித்தல் முறைமை

கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைத் தீர்மானிக்கும் போது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டதாகவும் மாணவர்களிடத்தில் தேர்ச்சிகளை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் கற்றல் - கற்பித்தற் செய்கைகளைத் திட்டமிடுவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அறிவை விருத்தி செய்வதற்கு மாணவர்களை குழுக்களாக ஈடுபடுத்துவதன் மூலம் மாணவர்களின் திறமைகளை வளர்க்க முடியும்.

சித்திரக்கலைப் பாடத்திட்டத்தில் செய்முறைப் பயிற்சியின் போது சிறந்த முறைகளை அறிந்து கொள்வதன் மூலம் அறிவை விருத்தி செய்ய முடியும். கருத்து வெளிப்பாடு, பொருட்களின் தன்மை, கிறபிக் சித்திரம், அலங்காரச் சித்திரம் போன்ற விடயங்களில் மாணவர்களை ஈடுபடுத்ததல் வேண்டும். அத்துடன் இப்பாடத்திற்குரிய கலைச் சொற்கள், கோட்பாடுகள், பல்வேறு வகையான உபகரணங்கள் நடத்தை போன்ற விடயங்களிலும் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் பல்வேறு திறன்களை வளர்க்கலாம்.

இப்படியான செயல்முறை செயற்பாடுகள் ஊடாக ஒளிநிழல் காட்டுதல், அளவுத்திட்டம், முப்பரிமாணத் தோற்றம் கோட்பாடுகள் போன்ற விடயங்களை வெளிப்படுத்தும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரங்கள் ஊடாக வர்ணப் பாவனைப் பயிற்சிகளிலும் ஈடுபடுத்துதல்.

பாரம்பரிய சித்திரங்கள் மூலம் அதன் கோட்பாடுகளை அறிந்து கொள்ளல். சுவரொட்டிச் சித்திரம்( போஸ்டர் சித்திரம்) அலங்காரச் சித்திரம், கிறபிக் சித்திரம், அலங்காரச் சித்திரத்தின் ஆரம்பக் கோட்பாடுகளை அறிவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல், மனித, மிருக உருவங்களையும் அளவுத்திட்டத்தில் வரைவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல், அத்துடன் அசைவுகளைக்காட்டுதல். தேசிய சர்வதேச சித்திரக்கலை வரலாறுகளை மாணவர்கள் அறிந்துகொள்ள வகை செய்தல்.

சித்திரக்கலையின் ஆரம்பம் வெளிப்பாடு, வெவ்வேறு சித்திர சிற்பக் காலங்கள் அக்காலத்திற்குரிய சிற்ப ஓவிய முறைகள், கலைப்பெறுமதி இவற்றிற்கு சமய, வெளிநாடுகளின் தாக்கம். அத்துடன் நயத்தல் போன்றவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்தல்.

சித்திரக்கலை கற்பிக்கும்போதும் சிற்ப முறைகளை நடைமுறைப்படுத்தும்போதும் மாணவர்களின் சரீர, வளர்ச்சியிலும் உளவளர்ச்சியிலும் ஆசிரியர் கவனம் செலுத்துதல் வேண்டும். விசேடமாக குழந்தைச் சித்திரங்களில் காலங்கள் பற்றிய அறிவு ஆசிரியரிடம் காணப்படல் வேண்டும். அதனடிப்படையில் சித்திரத்தின் தலைப்புக்களும் கற்ப்பித்தல் முறைகளிலும் மாற்றம் ஏற்பட வேண்டும்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

சித்திரக்கலை கற்றல் - கற்பித்தல் முறைமைகளுக்கு ஏற்ப பொருத்தமான கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தலாம்.

**பாட ஆரம்பத்தில் :**

- திறனை விருத்திசெய்தல்
- விவாதம்
- ரூபவாஹினி அல்லது ஒளிநாடா
- கற்புலச் சாதனங்கள்

**ஆய்வு அடிப்படையில் சித்திரக்கலை கற்பிக்கும் முறை :**

- குழு முறை
- பிரச்சனைகள் மூலம்
- திறந்த முறை
- தகவல் கல்வி
- விடய சுற்றுலா
- சித்திரக் கண்காட்சி ஒழுங்கமைத்தல்
- ஒப்படை
- செயற்றிட்டம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## சித்திரக்கலை - தர உள்ளீடுகள்

1. வரைதல்தாள் வகைகள்
   - வரைதல்தாள் வெள்ளை
   - பிரிசில்போட் (Mat) வெள்ளை
   - வானிஸ்தாள் (வெவ்வேறுவர்ணங்களில்)
   - எண்ணெய்த்தாள் (Tracing Paper)
   - எழுதும்தாள் (Half sheet)
   - வர்ணச் சஞ்சிகைகள்/பத்திரிகைகள்

2. வர்ண ஊடகங்கள்
   - பஸ்ரல்
   - நீர்வர்ணம் (டியுப்)
   - போஸ்டர் கலர்
   - இமல்சன் கலர்
   - அக்கறிலிக் சாயம்
   - அச்சுமை

3. தூரிகைகளும் வரைதல் பொருட்களும்
   - சேபல் மயிர் தூரிகை No. 03, 04, 05
     ஹொக் மயிர் தூரிகை No. 02, 06, 12
   - ப்பிலட்னம் கூர்
   - பென்சில் 2B, 4B, 6B
   - அடிமட்டம்
   - மீற்டர் அளவுகோல்
   - சித்தரம் வரையும்போது இருக்கும் இருக்கை (Donkey chairs)
   - வரைதல் பலகை (Drawing boards)
   - ரீ றூல்ஸ் (T Rules)
   - வர்ணம் கலக்கும் பலகை (Colour pallets)
   - குண்டூசி, கிளிப்ஸ்
   - சித்திரம் வைத்து வரையும் பலகை (Easels)
   - பளட் கைப் (Pallet knifes)
   - துணி (தடித்த, மெல்லிய)
   - கவராயப்பெட்டி

4. பார்த்து வரைதலுக்கான உபகரணம்
   - பிளாஸ்ரிக் பந்து
   - சிறிய மண்பானை
   - பிளாஸ்ரிக் வாளி

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- கணவடிவமுள்ள வடிவங்கள்
- கண்ணாடிப் போத்தல்

5. நவீன தொழில்நுட்பக் கருவிகள்
   - புரஜெக்டர் (OHP)
   - ஒளி ஊடுகடத்தும் தாள் (Transparent Sheets)
   - சிலைட்ஸ் (Slides)
   - கிறபிக் உருளை
   - கண்ணாடித்துண்டு (Graphic Boards)
   - கம்பி வளைக்கும் குறடு
   - கட்டர் குறடு
   - சிறிய சுத்தியல்
   - மரம் அரியும் வாள்
   - மேசன் கரண்டி சிறியது. (2, 4 அங்குலம்)
   - சிறிய வனை சில்லு (விட்டம் 10)
   - கடதாசி வெட்டும் கத்தி
   - வீடியோ கருவி

6. வேறு உபகரணங்களும் பொருட்களும்
   - பையின்ரகம்
   - பதப்படுத்திய களிமண்
   - பிளாஸ்ரப் பரீஸ்
   - சவர்காரக்கட்டி
   - றெஜிபோம் (ஒரு அங்குலம்)
   - சிமெந்து
   - கம்பி
   - (modeling tools)
   - பலகை துண்டுகள்

7. உள்ளூர் வெளியூர் கலைப்படைப்புக்கள்
   - அச்சிடப்பட்ட படங்கள்
   - வீடியோ நாடாக்கள்
   - சிலைட்ஸ் (Slides)

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# இணைப்பாட விதானச் செயற்பாடுகள்

## கண்காட்சி

- தேசிய மட்டக்கண்காட்சிகளுக்கு ஆக்கங்களை சமர்ப்பிக்கப் பங்களிப்புச் செய்தல்
- அழகியல் கல்வியுடன் தொடர்புடைய கண்காட்சிகளை ஒழுங்கமைத்தல்
- வகுப்பு ரீதியான கண்காட்சி

## போட்டிகள்

- இல்ல மட்டத்தில், பிரதேச மட்டத்தில், தேசிய மட்டத்தில், சர்வதேச மட்டத்தில்
- போட்டிகளுக்குப் பங்களிப்புச் செய்தல்

## சுற்றுலா

- கலை அம்சங்களையும் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட இடங்களையும் பார்வையிட ஒழுங்கமைத்தல்
- ஆய்வுகளுக்கான சுற்றுலா ஒழுங்கமைத்தல்

## வேறு

- கல்வியியலாளர்களின் சித்திரக்கண்காட்சிகளைப் பார்வையிடல்
- பாடத்திட்டத்திற்கமைவான செயலமர்வுகளில் பங்குகொள்ளல்
- வகுப்பறை அல்லது வகுப்பறை சுற்றாடலை அலங்கரித்தல்
- பாடசாலை தோட்டத்தை அலங்கரிக்கும் செயற்றிட்டம்
- பாடசாலை விழாக்களின்போது நிருமாண செயற்பாடுகளுக்கு உதவுதல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# கணிப்பீடும் மதிப்பீடும்

தரம் 10 சித்திரப்பாட விடயங்களைக் கணிப்பீடு செய்வதும் மதிப்பீடுகள் செய்வதும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறும் சந்தர்ப்பத்தில் என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

பொருத்தமான விடயப் பரப்புக்களில் கணிப்பீடு நடைபெறவேண்டும். கணிப்பீட்டின்போது மாணவர்களின் பலவீனம், இயலாமை, இயலுமை என்பவற்றை இனங்கண்டு கொண்டபின் அவர்களிடம் காணப்படும் கற்றல் தொடர்பான பிரச்சனைகளை நீக்கிக்கொள்வதற்கு பின்னூட்டலையும் மாணவர்களின் பலம், இயலுமை என்பவற்றை இனங்கண்டு கொண்டபின் அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு முன்னோக்கிய ஊட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையாகும்.

கற்றல் - கற்பித்தலை கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றோடு ஒன்றிணைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாட்டிலும் அதன் இரண்டாம் படியில் மாணவர்கள் குழுவாக ஆய்வில் ஈடுபடும்போது அவர்களை கணிப்பீடு செய்வதற்கும் செயற்பாட்டில் மூன்றாம் படியில் மாணவர்கள் தமது கண்டுபிடிப்புக்கள், பேறுகள் என்பவற்றைச் சமர்ப்பிக்கும் போது மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கும் ஆசிரியருக்கு முடியுமாகின்றது. மாணவர்கள் குழுவாக ஆய்வில் ஈடுபடும்போது அவர்களினூடே சென்று அவர்களது வேலைகளை அவதானிப்பதன்மூலம் மாணவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சனைகளை வகுப்பறையில் தீர்ப்பதற்குரிய வசதிகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவது ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றை இலகுவாகச் செய்து கொள்வதற்கு ஐந்து பொது நியதிகள் முன்வைக்கப்படுகின்றன. இந்நியதிகளில் முதன் மூன்றும் உரிய தேர்ச்சி மட்டத்தோடு தொடர்பான அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றைக் கொண்டதாகவும் அடுத்த இரண்டு நியதிகளும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் முக்கியமான இரண்டு திறன்களை விருத்தி செய்து கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும்.

பாடசாலை மட்டக்கணிப்பீடு வருடத்தில் என்பது தடவை கணிப்பிடப்படல் வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வகுப்பறைக் கணிப்பீட்டிற்கு மேலதிகமாக தெரிவுசெய்யப்பட்ட ஆறு வகையான கணிப்பீட்டு முறைகளை நடைமுறைப்படுத்துவது சிறப்பாக இருக்கும். கணிப்பீட்டு முறைகளுக்கேற்ப கணிப்பீட்டு கருவிகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

தேர்ச்சி மட்டத்தை அடைவதற்கு பல தேர்ச்சி மட்டங்கள் ஊடாக செல்ல வேண்டியுள்ள தால் பாடத்தின் தேர்ச்சி மட்டத்தை பெறுவதாயின் குறைந்தது அறுவது (60) புள்ளிகளுக்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும். புள்ளிகள் 60 - 80 வரையுள்ளவர்களை தேர்ச்சி மட்டத்தை அண்மித்துள்ளவர்கள் என்றும் புள்ளி 60 க்குக் குறைந்தவர்கள் தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை எனவும் கணிப்பிடப்பட்டுகின்றது. அவ்வகையில் :

| | |
|---|---|
| புள்ளி 0 - 60 | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை |
| புள்ளி 61 - 80 | தேர்ச்சி மட்டத்தை அண்மித்துள்ளார். |
| புள்ளி 81 - 100 | தேர்ச்சி மட்டத்தை அடைந்துள்ளார். |

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# சித்திரக்கலை
## பாடத்திட்டம் - தரம் 10

| தேர்ச்சி/தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|
| 1. சூழலுடன் இணைந்த விடயங்களின் கீழ் கருத்து வெளிப்பாட்டுச் சித்தரங்கள் | | 24 |
| 1.1 இயற்கைச் சூழலில் காணப்படும் இலகுவான தலைப்பின் கீழ் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரம் வரைவார். | • அளவுப் பிரமாணம்<br>• ஒளி நிழல்<br>• ஆழம்<br>• சமநிலை<br>• தலைப்பின் கருத்து<br>• கருத்து வெளிப்பாட்டுச் சூழலை அறிதல்<br>• மனித, மிருக சூழல் | |
| 1.2 செயற்கைச் சூழலில் காணப்படும் இலகுவான தலைப்பின் கீழ் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரம் வரைவார். | • பாரம்பரிய சித்திரங்களில் காணப்படும் ஆரம்ப அம்சங்களை அறிந்து கொள்ளல் | |
| 1.3 பாரம்பரிய கலை அம்சங்களை அறிந்து வரைவார். | • ஆரம்பக் கோட்பாடு<br>• கலை அம்சங்கள் | |
| 2. சூழலில் காணப்படும் பொருட்களின் அமைப்புடன் சமநிலையுடைய சித்திர ஒழுங்கிணைப்புடன் வரைவார். | | 20 |
| 2.1 இயற்கை, செயற்கை சூழலில் காணப்படும் பொருட்களைச் சித்திர ஒழுங்கிணைப்புடன் இயற்கை தன்மையை வெளிப்படுத்தும் வகையில் வரைந்து வர்ணம் தீட்டுவார். | • அளவுப் பிரமாணம்<br>• ஒளி நிழல்<br>• முப்பரிமாணத்தன்மை<br>• இயற்கைத் தன்மை<br>• இரேகை<br>• வர்ணம்<br>• இயற்கைப் பொருட்களை அறிந்து கொள்ளல்<br>• செயற்கைப் பொருட்களை அறிந்து கொள்ளல் | |

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| தேர்ச்சி/தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
| --- | --- | --- |
| 3. பாவனைக்குத் தேவையான அலங்காரச் சித்திரங்களைத் திட்டமிடுவர். நிருமாணிப்பார்.<br>3.1 பாவனைக்குத் தேவையான பொருட்கள், துணி வகை என்பவற்றைத் திட்டமிட்டு அலங்காரம் செய்வார். | • பாவனைப் பொருட்கள்<br>• ஆரம்ப வடிவமைப்பு<br>• தேவைக்குப் பொருத்தமான<br>• பாவனைக்குப் இலகுவாக<br>• குழந்தைகளின் தேவைக்குப் பொருத்தமானதாக<br>• அலங்காரம்<br>• பொருத்தமாக<br>• வர்ணம்<br>• ஆக்கத்திறனுடையதாக<br>• முடிவு/நிறைவு | 15 |
| 4. உற்பத்திக்குத் தேவையான கிறபிக் சித்திரங்களை நிருமாணிப்பார்.<br>4.1 கதைகளுக்கேற்ற சித்திரங் களை நிருமாணிப்பார். | • பல்வேறு கதைகளை விளக்கும் சித்திரங்கள்<br>• தேவை<br>• கோட்பாடுகளும் ஆரம்ப அம்சங்களும்<br>• இரேகைகள்<br>• வடிவங்கள்<br>• வர்ணம்<br>• பொருத்தமானதாக<br>• ஆக்கச் சிறப்புடையதாக | 06 |
| 5. பல்வேறு ஊடகங்கள் மூலம் சிலை களையும் சிற்பங்களையும் நிருமாணிப்பார்.<br>5.1 அப்புதல்/கட்டியெழுப்புதல் மூலம் இலகுவான உருக்களை நிருமாணிப்பார். | • பல்வேறு ஊடகப் பயன்பாடு<br>• செதுக்கல் சிற்ப முறை<br>• அப்புதல்/கட்டியெழுப்புதல் முறை கோட்பாடுகளும் ஆரம்ப அம்சங்களும்<br>• ஆக்கச் சிறப்புடையதாக<br>• ஊடகத்துக்குப் பொருத்தமானதாக<br>• நிறைவு | 06 |

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| தேர்ச்சி/தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|
| 6. சமய, கலாச்சார அடிப்படையில் தேசிய சர்வதேச ரீதியில் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலை நிருமாணங்களையும் தற்கால கலை ஆக்கங்களையும் வெகுசனத் தொடர்பு சாதனங்கள் மூலம் அறிந்து கொள்வார். | | 08 |
| 6.1 தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய, சர்வதேச கலைஞர்களின் கலை ஆக்கங்களை அறிவார். | • எம். சார்விஸ்<br>➢ பௌத்த சித்திரங்கள் (லிதோ முறை<br>• சோலியஸ் மென்டிஜ்<br>➢ புதிய களனி விகாரை ஓவியங்கள்<br>• எச்.ஏ. கருணாரத்ன<br>➢ எண்ணெய் வர்ண ஓவியம்<br>• ஜோஜ்கீற்<br>➢ கோதமி விகாரை சித்திரம்<br>➢ தலைவி சித்திரம்<br>• லியனாடோ டாவின்ஸி<br>➢ பாறை மீது தேவ மாதா<br>➢ மரியாளும் கானே'ன் பூவும்<br>➢ இறுதி இராப்போசனம்<br>• மைக்கல் அஞ்சலோ<br>➢ ஆதாமை படைத்தல்<br>➢ இறுதித் தீர்ப்பு<br>➢ டேவிற் சிலை<br>➢ பியேட்டா சிலை<br>• றபாயேல் சென்சியோ<br>➢ அதென்ஸ் பாடசாலை<br>➢ குழந்தை யேசுவும் ஜோனும் மரியாளும்<br>➢ சிங்காசனத்தில் மரியாள் | |
| 6.2 வெகுசன ஊடகங்களின் மூலம் பல்வேறு கலை நிருமாணங்களின் பகுதிகளை அறிவார். | தெரிவு செய்யப்பட்ட சிறுவர் நாடகம்<br>• ஒப்பனை<br>• ஆடை அலங்காரம்<br>• பின்னணி<br>• ஒளி அமைப்பு | |

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| தேர்ச்சி/தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
| --- | --- | --- |
| 7. தேசிய, சர்வதேச வரலாற்றுக் காலத்திற்குரிய ஓவியங்கள், சிற்பங்களின் கலைப் பெறுமதியை விமர்சனம் செய்து அவற்றில் காணப்படும் சிறப்பம்சங்களை தனது நிருமாணங்களுக்குப் பயன்படுத்துவார். | | 10 |
| 7.1 கண்டி, கம்பளைக் காலங்களுக்குரிய கட்டிடக் கலை, சிற்பக்கலை, ஓவியக் கலை என்பவற்றை ஆராய்வார். | • கண்டிக் காலத்திற்குரிய கலை நிருமாணங்களும் கட்டிட நிருமாணங்களும்<br>➢ தலதா மாளிகை<br>➢ மெதவல டம்பிற்ட விகாரை<br>சித்திரம்<br>➢ தம்புள்ள விகாரை ஓவியங்கள்<br>சிலைகள்<br>➢ தம்புள்ள விகாரை - இருந்த புத்தர் சிலை<br><br>• கம்பளைக் காலத்திற்குரிய கலை நிருமாணங்களும் கட்டிடக்கலையும்<br>➢ கடலதெனிய விகாரை<br>➢ இலங்காதிலக விகாரை<br>சித்திரம்<br>➢ இலங்கதிலக விகாரைச் சித்திரங்கள்<br>சிலைகள்<br>➢ கடல தெனிய விகாரை புத்தர் சிலை | |
| 7.2 எகிப்திய, கிரேக்க கலைகளை ஆராய்வார். | • எகிப்திய கலை நிருமாணங்கள்<br>சிலைகள்<br>➢ நேபர்ற்றி<br>➢ இலிகிதர்/எழுத்தாளன்/ஸ்கிரைப்<br>➢ ஸ்பிங்ஸ்<br>சித்திரம்<br>➢ மிடமின் வாத்து<br>➢ குருவி வேட்டை<br>கிரேக்க கலை நிருமாணங்கள்<br>➢ வீனஸ் தி. மேலோ<br>➢ பரிதிவட்டம் எறியும் வீரன்<br>➢ ஹேமிரசும் டயோனிசும்<br>➢ அதீனா தெய்வம்<br>➢ லவோகுன்/பாம்புடன் மனிதன் | |

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.